IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.97 /2015
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சதீஷ்** | Caste | : | |
| Father Name | : | **ஞானபிரகாசம்** | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of June, 2026.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தந்தை மற்றும் பாட்டி ஆண்டாள் அம்மாள் பாஞ்சாலிக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சாட்சி முதலில் தெரியவில்லை என்ற கூறிவிட்டு பிறகு சரிதான் என்று கூறுகிறார். மேற்படி ஆவணம் **Ex. B1 வாதி தரப்பு சாட்சி ஒன்றின் மூலம் குறியீடு செய்யப்படுகிறது**. சீனிவாசன் என்பவர் குமாருக்கு எப்போது விற்பனை செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் சீனிவாசன் மற்றும் குமார் புகைப்படம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. மேற்படி புகைப்படம் **Ex. B2 வாதி தரப்பு சாட்சி ஒன்றின் மூலம் குறியீடு செய்யப்படுகிறது**. சீனிவாசனுக்கும் இவ்வழக்கிற்கும் என்ன சம்மந்தம் என்றால்சொத்தை அவர் தான் வாங்கியுள்ளார். சொத்தை சீனிவாசன் இன்று வரை வைத்துள்ளார் என்றால் இல்லை. சொத்தை தற்போது யார் வைத்துள்ளார்கள் என்றால் மனோகரன், குமார் மற்றும் பாஞ்சாலி ஆகியோர் வைத்துள்ளனர். நான் சொல்லி உள்ள மேற்கண்ட குமாரும் Ex. B2 ல் உள்ள குமாரும் ஒரே குமார் தான் என்றால் சரிதான். சீனிவாசன் குமாருக்கு தாவா சொத்தை விற்பனை செய்த வருடம் எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு தாக்கல் செய்யும் போது அதாவது 2014 வருடம் தான் தெரியும்.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணம் சீனிவாசன் குமாருக்கு விற்பனை செய்த ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணமானது **Ex. B3 ஆக வாதி தரப்பு சாட்சி ஒன்றின் மூலம் குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தந்தை ஞானபிரகாசம் மற்றும் என் பாட்டி ஆண்டாள் அம்மாள் ஆகியோர் சீனிவாசனுக்கு விற்பனை செய்த பத்திரம் ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணமானது **Ex. B4 ஆக வாதி தரப்பு சாட்சி ஒன்றின் மூலம் குறியீடு செய்யப்படுகிறது**.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF,
KATPADI.